# திருமந்திரத்தில் சட்டக்கல்வி

***சித்தாந்த ரத்தினம் முனைவர் பொன் மாணிக்கவல்லி***
நிறுவநர், அனைத்துலகத் திருமந்திரம் மற்றும்
யோகா ஆராய்ச்சி நிறுவனம், தஞ்சாவூர்

**மலர்: 12**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: மே**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v12iS1-May.8994

உலக நாடுகளில் வாழும் அனைவருக்கும் மொழிகள் பொதுவானவை. அவரவர்களுக்குத் தெரிந்த மொழிகளில் பேசியும் எழுதியும் தங்களுடைய கருத்துகளை பரிமாறிக் கொள்வது உலக வழக்கு. அதைப் போலவே கல்வி, கலை, கலாச்சாரம் போன்ற துறைகளும் பொதுவானவை என்றாலும், ஒவ்வொரு துறைக்கும் சட்ட விதிகள் என்று ஒன்றுள்ளது. நமது கடமை இதிலிருந்து தவறும்போது, தண்டனைச் சட்டம் தண்டனை வழங்குவதைப் போல, உயிர்களாகிய நாம் தவறு செய்யும்போது நோயாகவும் தண்டனை பெறுகின்றோம். இதை திருமந்திரம் தெளிவாக விளக்கமளிக்கிறது. எனவே, “திருமந்திரத்தில் சட்டக்கல்வி” என்ற தலைப்பில் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

### தமிழரின் வாழ்வியல் கல்வி

தமிழரின் வாழ்வியல் என்பது பெரும்பாலும் அன்பும் அறக்கோட்பாடின் விதிப்படியே நம் முன்னோர்கள் வாழ்ந்துள்ளார்கள். இதற்கெல்லாம் காரணம், மனதை செம்மையாகவும் மேலான எண்ணம், சொல், செயல்களை கடைபிடித்து, அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப்பொருளை சிக்கனப் பிடித்து மனிதப் பிறப்பே சிறப்பானது என வாழ்ந்து காட்டியதின் எச்சமே இன்றைய நம் வாழ்வு. ஆனால், இக்காலக் கட்டத்தில் பரபரப்பாக இயந்திரத்தை விட வேகமாகப் பயணிக்கும் சூழல். ஆகையால் மனமும் உடலும் தடுமாற்றமடைந்து, நோயற்ற வாழ்வு, மன அமைதியின்மை குற்றமற்ற செயல்கள் போன்றவை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருவதால், மருத்துவமனைகள், காவல் நிலையங்கள் மற்றும் நீதிமன்றங்களில் மக்கள் கூட்டம் அதிக அளவில் நிரப்பிக் கொண்டே இருக்கிறது. இதெல்லாம் மானிடப் பிறப்பிற்கு உகந்தது அல்ல என்பதால், திருமூலர் பல்லாண்டுகளுக்கு முன்பே திருமந்திரத்தில் செய்யுள் வடிவில் பதிவு செய்யுள்ளதைக் காண முடிகிறது, இதனை,

**துணைஅது வாய்வரும் தூயநற் சோதி**
**துணைஅது வாய்வரும் தூயநற் சொல்லாம்**
**துணைஅது வாய்வரும் தூயநற் கந்தம்**
**துணைஅது வாய்வரும் தூயநற் கல்வியே**

**(திருமந்திரம் 294)**

என்றுரைக்கிறது. ஆக, தூய்மையானது எதுவோ அதுவே நமக்குத் துணையாக வரும் என்று பாடல் உணர்த்தும் செய்தியாக உள்ளது. இதுவே தமிழரின் வாழ்வியல் கல்வி என்பது புலனாகிறது.

தூய இக்கல்வியை கற்பதோடு மட்டுமல்லாமல் அதன்படி வாழ்தல் மிகவும் சிறப்பு என்பதனை,

***கற்க கசடுஅறக் கற்பவை கற்றபின்***
***நிற்க அதற்குத் தக***

***(திருக்குறள் 391)***

படிப்பதற்கு ஏற்ற நூல்களைக் குற்றம் நீங்கக் கற்க வேண்டும். கற்ற நூல்களில் அறிந்து கொண்ட கருத்துக்களுக்குத் தக்கவாறு வாழ்க்கையில் பின்பற்றி நடக்கவேண்டும் என திருவள்ளுவர் சுட்டிக்காட்டுகிறார்.

### கல்வி என்பது என்ன ?

இந்திய நாட்டில் பிறந்தவர் உலக நாடுகளில் உள்ள மக்கள் வியந்து பார்க்கக் கூடியவர். சட்டம் பயின்றவர். ஜனவரி 12 இவரின் பிறந்த நாளை இளைஞர் தினமாக அறிவித்தது ஐ.நா. இவ்வளவு பெருமைக்குரியவர் சுவாமி விவேகானந்தர். இவர், கல்வி என்பது என்ன? அதன் பயன் என்ன? என்பதைக் கூறும் விளக்கத்தைக் காணலாம்.

நல்ல ஒழுக்கத்தைத் தருவமாகக் கல்வி இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற மிகப் பெரிய ஆர்வத்தைத் தருவதாகக் கல்வி இருக்க வேண்டும்.

கல்வி என்பது ஒருவனுக்குத் தன்னம்பிக்கையைத் தருவதாக இருக்க வேண்டும். கல்வி ஒருவன் தன்னுடைய சொந்தக் கால்களில் நிற்பதற்கு உதவி செய்வதாக இருக்க வேண்டும்.

மக்களுக்கும் பண்பாட்டையும் கல்வியையும் அளித்து, அவர்களை அறியாமை என்ற தூக்கத்திலிருந்து விழிக்கச் செய்கிறது.

ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது, அந்த நாட்டு மக்கள் பெற்றிருக்கும் கல்வி, அறிவாற்றல் ஆகியவற்றைப் பொறுத்தே அமைகிறது.

வெறும் புள்ளி விவரங்களைச் சேகரித்துக் கொண்டிருப்பதல்ல மனதை ஒரு முகப்படுத்துவதுதான் என்னைப் பொறுத்த வரையில் கல்வியின் அடிப்படையான இலட்சியமாகும்.

நாம் அமைக்கும் கல்வி, நாடு முழுவதற்கும் பொதுவாக விளங்கும் கல்வியாக இருக்க வேண்டும். ஆன்மிகம் கொண்டதாகவும், உலக நடைமுறைக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும். என விளக்குகிறார் சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகள்.

### சட்டமும் அதன் விளக்கமும்
### சட்டத்தை இயற்றியவர் யார்

1947, ஆகஸ்ட் 29-ல் அரசியல் நிர்ணய மன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. அதன்படி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுத பீ.இரா. அம்பேத்கர் தலைமையில் அவர் உட்பட ஏழு பேர் கொண்ட அரசியலமைப்புச் சட்ட வரைவுக்குழு (Drafting Committee) உருவாக்கப்பட்டது. இதைப்பற்றி இனி சுருக்கமாகக் காணலாம்.

### இந்திய சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் (Law & Order)

ஒவ்வொரு நாடும் காலத்திற்கு ஏற்றாற்போல சட்டங்களையும் விதிமுறைகளையும் மானிட வாழ்வு வளம் பெற இயற்றுவதுண்டு. சட்டம் என்பது ஒரு நிறுவன அமைப்பால் அதன் ஆளுகை எல்லைக்குள் வாழும் அனைவரையும் ஒழுங்குபடுத்தும் விதிகள், நெறிமுறைகள் போன்றவற்றைக் குறிக்கும் ஒரு சமூகத்தின் நன்மதிப்பு மற்றும் சமத்து வத்தை உறுதி செய்வதே சட்டத்தின் நோக்கமாகும்.

சில எடுத்துக்காட்டுகள்

1. தமிழ்நாடு வன்செயல்கள் தடுப்புச் சட்டம், 1982
2. தமிழ்நாடு சம்பளம் வழங்குதல் சட்டம், 1951

3. பெண்களைக் கேலி செய்தல் தடைச் சட்டம், 1998
4. மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016.
5. இந்திய பொக்கிஷம், புதையல் சட்டம், 1878.

இதுபோன்ற இன்னும் பல சட்ட விதிகள் நடைமுறையில் உள்ளன.

**இந்திய அரசியலமைப்பு, அடிப்படை உரிமைகள் (Fundamental Rights)**

**அடிப்படை உரிமை**

இந்திய அரசியலமைப:புச் சட்டம் பகுதி (III) 12 ல் இருந்து 35 வரையுள்ள சட்டப் பிரிவுகள் அடிப்படை உரிமைகள் பற்றி கூறுகின்றன. அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் இந்த அடிப்படை உரிமைகளை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பிலுள்ள அடிப்படை உரிமைகளின் தாக்கத்தால் உருவாக்கினார்கள். முதலில் அரசியலமைப்பு ஒரு அடிப்படை உரிமைகளை வழங்கியது. ஆனால் தற்போது ஆறு அடிப்படை உரிமைகள் மட்டுமே உள்ளன. இந்திய அரசியலமைப்பின் பகுதி (III) "இந்தியாவின் மகாசாசனம்" என அழைக்கப்படுகிறது. இந்தியாவில் வசிக்கும் மக்கள் அனைவருக்கும் அடிப்படை உரிமைகள் பொதுவானது.

**சமத்துவத்திற்கான உரிமை (பிரிவு 14-18)**

சட்டத்தின் முன் அனைவரும் சமம், பாகுபாடு இன்றி நடத்தப்படுதல், சாதி, மதம், இனம், பாலினம் ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபாடு காட்டக் கூடாது போன்ற உரிமைகள் அடங்கும்.

இந்திய அரசியலமைப்பு (Constitution of India) என்பது இந்தியாவின் உயர்ந்தபட்ச சட்டமாகும். இது இந்தியாவின் ஆட்சி, அமைப்பு, குடிமக்களின் உரிமைகள் மற்றும் கடமைகளை வரையறுக்கிறது.

**இந்திய குற்றவியல் சட்டம்**

இந்திய குற்றவியல் சட்டம் என்பது குற்றவியல் நடைமுறை, தண்டனை வழங்கல் மற்றும் சமூக ஒழுங்குமுறையை நிலைநிறுத்துதல் போன்ற சட்டங்களை உள்ளடக்கியது. இதில் முக்கிய சட்டங்கள் இந்திய தண்டனைச் சட்டம் (Indian Penal code IPC), குற்றவியல் நடைமுறைச் சட்டம் (Code of Criminal Procedure - CrPC), இதுவே இன்றைய சட்டத்தின் விதிமுறைகளாக இருக்கிறது. குற்றங்களை வரையறுத்தல், தண்டனை விதித்தல் போன்றவற்றை உள்ளடக்கியது. குற்றங்கள் செய்த நபர் தண்டனை அனுபவிப்பது பிறகு அதில் இருந்து விடுபடுவது அவரவரின் திறமையைப் பொறுத்தது. ஆனால், திருமந்திரம், தவறைச் சுட்டிக்காட்டி நல்வழியில் செல்லும் வழியை தெளிவாகக் கூறுகிறது.

**அறிவுஐம் புலனுட னேநான்ற தாகி**
**நெறியறி யாதுற்ற நீர்ஆழம் போல**
**அறிவுஅறி வுள்ளெ அழிந்தது போல**
**குறியறி விப்பான் குருபர னாமே**

**(திருமந்திரம் 119)**

வழியறியாது கடற்சூழலில் அகப்பட்டு மயங்கும் ஒருவனைப் போல் ஆன்மா ஐம்புலனிற் கழன்று மயக்கமெய்தி நிற்கும். அவனுக்குச் சிற்றறிவாகிய ஆன்மா பேரறிவாகிய இறை நிறைவில் அழிந்தது போல் நல்வழியடைவிற்குச் சாதனமாகப் பரம குருவாகிய ஒரு லட்சியத்தைக் காட்டுவான்.

ஒருவன் பெறுதற்கரிய பிறவியைப் பெறுவது மட்டும் சிறப்பல்ல. தீய செயல்கள் செய்யாமை நன்று. இதனை, இயமமாகிய தீதகற்றலும், நியமமாகிய நன்றாற்றலும் அவசியமாக்கப்பட்டால், வாழ்வு நிறைவு பெறும் என்ற கருத்தை திருமூலர் பதிவு செய்துள்ளார்.

**இயமம் (தீதகற்றல்)**

**கொல்லான்பொய் கூறான் களவிலான் எண்குணன்**
**நல்லான் அடக்க முடையான் நடுச்செய்ய**

**வல்லான் பகுத்துண்பான் மாசிலான் கள்காமம்**
**இல்லான் இயமத் திடையின்நின் றானே**
**திருமந்திரம் 554**

ஓர் உயிரைக் கொல்லாதவனும், பொய் கூறாதவனும், களவு செய்யாதவனும், உயர்ந்த குணமுடையவனும் நல்லவனும், அடக்க முடையவன், நீதி வழுவாதவனும், பகிர்ந்து உண்பவனும், குற்றமில்லாதவனும், கள்ளும் காமமும் இல்லாதவனுமாகிய தன்மை உடையவனே இயம ஒழுக்கங்களில் நிற்பவன் ஆவான்.

**நியமம் (நன்றாற்றல்)**

**தூய்மை அருள்ஊண் சுருக்கம் பொறை செவ்வை**
**வாய்மை நடுநிலைமை வளர்த்தலே மற்றிவை**
**காமம் களவு கொலையெனக் காண்பவை**
**நேமிஈர் ஐந்தும் நியமத்த னாமே**
**திருமந்திரம் 556**

தூய்மை, கருணை, சுருங்கிய உணவு, பொறுமை, நேர்மை, வாய்மை, உறுதியுடைமை ஆகியவற்றை வளர்த்தலும். ஏனைய காமம், களவு, கொலை ஆகியவற்றைத் தீமையெனக் கண்டு செல்லும் மனமுடையவன் நியமத்தான் என திருமந்திரம் பொருள் கூறுகிறது.

அனைத்துச் செயல்களுக்கும் மூலகாரணம் மனம். மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம் என்பது அகத்தியர் வாக்கு. எனவே, நல்லெண்ணம், நற்சொல், நற்செயல்களை மந்திரமாக ஏற்றுக் கொள்வோம்.

**நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த**
**மறைமொழி தானே மந்திரம் என்ப**
**தொல்.பொருள் 450.**

**நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**
**முறைமொழி காட்டி விடும்.**
**திருக்குறள் 28**

ஆக, மறைமொழி என்பது மந்திரம். மந்திரம் என்றால், நினைப்பவனைக் காப்பாறறக் கூடியதும், நிறைவான பொருளைத் தரக்கூடிய திருமந்திரத்தை கல்லூரிகளில் இவற்றின் சாரமாகிய பிழிவுகளும் குறிப்புகளும் உளங்கொளுமாறு அளவாகக் கற்பித்தல் வேண்டும் என திருமந்திர உரையாசிரியராக ப. இராமநாதன் கூறுகிறார்.

**நிறைவுரை**

"ஒன்றே குலம் ஒருவனே தேவன" என்ற வாக்குக்குச் சொந்தக்காரர். அவர் அருளிய திருமந்திரம் "மூவாயிரம் தமிழ்", "தமிழ் நூல்" எனப் போற்றப்படுவதற்குக் காரணம் ஒரு செயலைச் செய்யும்போது நல்வினையும் தீவினையும் ஏற்படும் என்பது விதி. ஆகையால், தன்னையறிந்து தனக்கொரு கேடில்லாமல் வாழும்போது எக்காலத்திலும் எந்தக் குற்றமும் தண்டனையும் இல்லாமல் மன நிம்மதியோடு மானிடப் பிறப்பை நிறைவுபடுத்த இயலும் என்பதனை உலக நாடுகளில் வாழும் மக்களுக்கு பொது வானதாக இருப்பதால் திருமந்திரத்தை சட்டக்கல்வியாகக் கையாளுவதில் பெருமையடைவோம்.

**மேற்கோள்**


1. திருமந்திரம் மூவாயிரம், சித்தாந்த பண்டிதர் ப. இராமநாத பிள்ளை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், ஆழ்வார் பேட்டை, சென்னை-18.
2. சுவாமி விவேகானந்தரின் பொன் மொழிகள், vikatan, https://www.vikatan.com/
3. திருமந்திரம், வித்வான் நாராயண வேலுப்பிள்ளை, வர்த்தமானன் பதிப்பகம், தியாகராய நகர், சென்னை - 17.
4. திருக்குறள், பூவை அமுதன், (S.R. கோவிந்தராசன் ஆயு), கவிதா பதிப்பகம், சென்னை - 17.
5. TNPSC / UPSC, முகநூல்